தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

தொகுதி - XXVII

வேலூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி -IV



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2024 திருவள்ளுவர் ஆண்டு 2055

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண் : 66

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி – XXVII

வேலூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி – IV

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண்: 66

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி – XXVII

வேலூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி – IV

பதிப்பாசிரியர்

முனைவர் ர.பூங்குன்றன்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை – 600 008
2025 – திருவள்ளுவர் ஆண்டு 2056

BIBLIOGRAPHICAL DATA

Title	: TAMILNADU INSCRIPTIONS – VOL. XXVII (Vellore District Inscriptions - Vol. IV)
Editor	: R. Poongundran
Copy right	: Tamiln Nadu State Dept. of Archaeology
Subject	: Epigraphy
Language	: Tamil & English
Edition	: First
Publication No	: 352
Year	: 2025
Type point	: 12
No. of pages	: 376
No. of copies	: 1000
Paper used	: 80 Gsm Maplitho paper
Publisher	: State Department of Archaeology, Tamil Valarchi Valaagam, Thamizh Salai, Egmore, Chennai - 600 008.
Printed by	: Evershine Multipurpose Co-operative Society Ltd., No. 32. Koya Arunagiri Ist Street, Royapettah, Chennai-600 014
Price	: Rs. 250/-

பொருளடக்கம்

	பதிப்புரை	. . .	i
	முன்னுரை	. . .	iii
1.	திருமால்பூர்	. . .	1
2.	தக்கோலம்	. . .	120
3.	களத்தூர்	. . .	205
4.	வேலூர் பாளையம்	. . .	221
5.	சிறுகரும்பூர்	. . .	225
6.	பெருவளையம்	. . .	230
7.	காவிரிப்பாக்கம்	. . .	235
8.	விரிஞ்சிபுரம்	. . .	308
9.	காங்கேய நல்லூர்	. . .	319
	நிழற்படங்கள்	. . .	325
	சொல்லடைவு	. . .	353

இ. க. ஆண்டறிக்கை - இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கை

தெ. க. தொ. - தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி

ARE. - Annual Reports on (South) Indian Epigrapy

EI. - Epigraphia Indica

SII. - South Indian Inscriptions

த. உதயச்சந்திரன், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (ம)
ஆணையர் (மு.கூ.பொ.)

தொல்லியல் துறை
தமிழ்வளர்ச்சி வளாகம்,
தமிழ்ச்சாலை,
சென்னை-600 008

பதிப்புரை

வரலாற்றினை எழுதுவதற்குத் துணைபுரியும் சான்றுகளாகத் திகழ்பவை கல்வெட்டுகள், காசுகள், செப்பேடுகள், அகழாய்வுத் தொல்பொருட்கள், வரலாற்றுச் சின்னங்கள், இலக்கியங்கள் போன்றவையாகும். வரலாற்றினை அறிய உதவும் கல்வெட்டுகளைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையானது தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து, படித்து, பதிப்பித்து, நூலாக வெளியிடும் பணியினைத் தனது முதன்மைப் பணிகளில் ஒன்றாக செய்து வருகிறது.

இத்துறைக் கல்வெட்டுப்பிரிவு வாயிலாக இதுவரை 9828 கல்வெட்டுகள் 65 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 2024-ஆம் ஆண்டில் இந்நூல் கல்வெட்டு வரிசை எண் 66- ஆவது நூலாக வெளியிடப்படுகின்றது. வேலூர் மற்றும் பிற ஊர்களிலிருந்தும் படியெடுக்கப்பட்ட 230 கல்வெட்டுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியில் திருமால்பூர், தக்கோலம், களத்தூர், வேலூர் பாளையம், சிறுகரும்பூர், பெருவளையம், காவேரிப்பாக்கம், விரிஞ்சிபுரம், காங்கேய நல்லூர் ஆகிய ஊர்களின் கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி - XXVII (வேலூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி -IV) என்னும் தலைப்பில் வெளிவருகின்றது.

இக்கல்வெட்டுகளைப் படித்துத் திருத்தி பதிப்பித்து நூலாக்கம் செய்யும் பணியினை மேற்கொண்ட இத்துறையின் மேனாள் உதவி இயக்குநர் முனைவர் ர. பூங்குன்றன் அவர்களுக்கும், இக்கல்வெட்டுகளை நூலாக வெளிக்கொணரும் பணியில் ஈடுபட்ட இணை இயக்குநர் முனைவர் இரா. சிவானந்தம் அவர்களுக்கும், உதவி இயக்குநர் (தொழில் நுட்பம்) திருமதி கி. பாக்கியலட்சுமி, தொல்லியல் அலுவலர் திருமதி இரா. சுபாஷினி மற்றும் உதவி தொல்லியல் அலுவலர் திருமதி க. சந்தியா அவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை தட்டச்சு, D.T.P. மற்றும் நிழற்படங்கள், அட்டைப்படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திரு. மு. சக்திவேல் அவர்களுக்கும் எனது பாராட்டுகள்.

துறை அலுவலர்களின் உழைப்பாலும், பெரும் முயற்சியாலும் இது போன்ற நூல்களை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். முதன்மைத் தரவுகளாக உள்ள இக்கல்வெட்டு வாசகங்களை ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள் பயன்படுத்தி இப்பகுதியின் வரலாற்றினை எழுதுவதற்கு உதவும் என்ற நோக்கில் இந்நூலினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (ம)
ஆணையர் (மு.கூ.பொ)

முன்னுரை

வேலூர் மாவட்டத்தின் நான்காம் தொகுதியாக இத்தொகுப்பு அமைகின்றது. இத்தொகுப்பில் மொத்தம் இருநூற்றுமுப்பது கல்வெட்டுகள் பதிக்கப்பட்டுள்ளன. பல்லவ அரசர்களில் மூன்றாம் சிம்மவர்மன், இரண்டாம் நந்திவர்மன் காலம் முதல் நாயக்கர் காலம் வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவை. பல்லவர்களில் மூன்று அரசர்களின் கல்வெட்டுகள் மட்டுமே உள்ளன. சோழர்காலக் கல்வெட்டுகள் முதலாம் பராந்தகன் காலம் முதல் மூன்றாம் இராசராசன் காலம் வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவை. சோழர்களின் வீழ்ச்சிக்குப் பின்அல்லது சோழர்களின் இறுதிக் காலங்களில் சம்புவராயர் ஆட்சி நடைபெற்றது. சம்புவராயர் காலத்திலேயே தெலுங்கு சோழர்கள் காலத்துக் கல்வெட்டுகள் சில இத்தொகுப்பில் உள்ளன. சம்புவராயர்களுக்குப் பின் விசயநகர மன்னர்களின் காலத்துக் கல்வெட்டுகள் பல தொகுக்கப் பெற்றுள்ளன. விசயநகரர் காலத்துக் கல்வெட்டுகள் அக்கால நிலவுடைமை பற்றிப் பேசுகின்றன. விசய நகர மன்னர்களில் காலத்தில் கோயில் வருமானத்திற்கென பல கொடைகள் (நிலம், வரிகள்) வாரி வழங்கினர். திருமால்பூர், தக்கோலம் போன்ற ஊர்களில் பல அரச மரபினர் கோயில்களுக்கு அளிக்கப் பெற்ற கொடைகள் ஏராளம்.

மன்னர்கள் மட்டுமின்றி பிராமணர்கள், வேளாளர்கள், வணிகர்கள், அரசு அதிகாரிகள், (மூவேந்த வேளான்கள், காமிண்டர்கள்) பிரம்மதேயக் கிழவர்கள், வணிகர்கள், சமுகத்தில் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் இந்த மாவட்டத்துக் கோயில்களுக்குக் கொடை அளித்துள்ளனர். கொடைகள் சரிவர நடத்தப் பெறுகின்றதா என்பது பற்றி ஆய்வு செய்து தீர்ப்பு வழங்கிய செய்திகளும் உள்ளன. சோழர் காலத்து இறுதி நாட்களில் சமூக நெருக்கடிகள் பற்றிய செய்திகள் சில கல்வெட்டுகளில் பயின்று வருகின்றன.

பல்லவர்

பல்லவ மன்னர்களில் மூன்றாம் சிம்மவர்மன், முதலாம் மகேந்திரவர்மன், இரண்டாம் நந்திவர்மன், கம்பவர்மன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன.

மூன்றாம் சிம்மவர்மன்

வேலூருக்கு அருகில் உள்ள சோழவரத்தில் கட்டுமானக் கோயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. சோழவரத்தில் திருமால் கோயில் உள்ளது. இக்கோயிலில் மூன்றாம் சிம்மவர்மனின் கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டில் அர்ச்சனாபோகம், கோயில் பணியாளர்கள் சம்பளம் ஆகியவற்றிற்கு நிலக்கொடை அளித்த செய்தி கூறப்பெறுகின்றது. ஏறக்குறைய 1450 ஆண்டுகள் பழமையுள்ள கட்டுமானக்கோயில் இது ஒன்றே ஆகும்.

இரண்டாம் நந்திவர்மன்

இவன் காலத்து நடுகல் ஒன்று இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இந்த நடுகல்லின் பின் பகுதி சிதைந்துள்ளது. இந்த நடுகல் கல்வெட்டில் இறுதிச் சொல்லாகக் 'கன்னாடு' என்ற சொல் குறிக்கப் பெறுகின்றது. கன்னாடு பற்றி வேலூர் மாவட்டக் கல்வெட்டுகள் முதல் தொகுதியில் விளக்கப்பெற்றுள்ளது. இக்கோயிலுக்கு நிலம் கொடுத்ததைப் பற்றி மற்றொரு கல்வெட்டுக் கூறுகின்றது.

கம்பவர்மன்

இவன் காலத்துக் கல்வெட்டுகள் இரண்டு கிடைத்துள்ளன. ஒன்று நடுகல், இரண்டாவது ஏரிக்குக் கால்வாய் வெட்டிய செய்தியைக் கூறுகின்றது. கால்வாய் வெட்டியதற்குக் காரணம் பிரதி கங்கரையர்க்கும் அவனுடைய மனைவி இலாடமாதேவிக்கும் பிறந்த மகன் இறந்துவிட்டான் அவனுடைய நினைவாக இந்தக் கால்வாய் வெட்டப்பெற்றது.

சோழர்கள்

சோழ மன்னர்களில் முதலாம் பராந்தகன், உத்தமசோழன், ஆதித்த கரிகாலன், பார்த்திவேந்திரன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் ஆகியோர் கல்வெட்டுகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

முதலாம் ஆதித்தன்

சோழமன்னர்களின் குடிமரபு வழியில் முதலாம் ஆதித்தன் இரண்டாம் மன்னனாக கருதப்படுகிறான். இவனுடைய கல்வெட்டு விளக்குக் கொடையைப் பற்றிக் கூறுகிறது.

முதலாம் பராந்தகன்

இம்மன்னனின் மூன்று கல்வெட்டுகள் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. அவை தக்கோலத்திலும், திருமால்பூரிலும் பொறிக்கப்பெற்றுள்ளன. அவை விளக்கு கொடையையும், நிலக்கொடையையும் பற்றிக் குறிப்பிடுகின்றன. பள்ளூர் என்ற ஊரில் கிடைத்த கல்வெட்டு பள்ளிச்சந்தம் அளித்தமை பற்றிக் குறிப்பிடுகின்றது.

ஆதித்த கரிகாலன்

இம்மன்னனுடைய கல்வெட்டு இரண்டு கிடைத்துள்ளன. ஒரு கல்வெட்டு சகரை ஆண்டு என்று தொடங்குகின்றது. ஆனால் ஆட்சி ஆண்டு ஒன்று அழிந்துவிட்டது 'பாண்டியன் முடித்தலை கொண்ட' என்ற தொடக்கம் பயின்று வருவதால் இந்த கல்வெட்டுக்குரிய மன்னன் ஆதித்தகரிகாலன் என்பது உறுதி ஆகின்றது. அடுத்த கல்வெட்டு பாண்டியன் முடித்தலை கொண்ட பரகேசரி என்று தொடங்குவதால் இதுவும் ஆதித்தகரிகாலன் கல்வெட்டு என்பது உறுதியாகின்றது. இவ்விரண்டும் நடுகல் கல்வெட்டுகளே.

உத்தம சோழன்

இம்மன்னனுடைய கல்வெட்டு ஒன்று இடம் பெற்றுள்ளது. இக்கல்வெட்டு ஒன்றிய அரசு வெளியிட்ட தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி மூன்றில் வெளியிடப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு ஆற்றூர் துஞ்சின தேவரின் 22-ஆம் ஆட்சியாண்டில் சங்கப்பாடிகிழான் என்பவன் அளித்த நிலக்கொடையை புதுப்பாக்கத்து சபையார் பெற்றுக்கொண்டு புரவு 3800 காடியும் இரவு 561 காடியும் (நெல்) பொன் இருபத்து ஆறு கழஞ்சும் கோயிலுக்கு அளிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால், இந்தக் கொடையை வரிப்பொத்தகத்தில் சேர்க்கப்படவில்லை. மேலும் புரவு, இரவு ஆகியவற்றைச் செலுத்தவில்லை. மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரிவர்மனின் ஆட்சியில் நான்காம் ஆட்சியாண்டில் மனு அளித்தனர். மறுபடியும் இம்மன்னன் 36-ஆம் ஆட்சியாண்டில் வரிப்பொத்தகத்தில் சேர்த்தார்கள். இருப்பினும் சபையார் கோயிலுக்குச் செலுத்த வேண்டிய நெல்லையும் பொன்னையும் செலுத்தவில்லை. இந்த உண்மையைக் கண்டறிந்த உத்தமசோழன் புரவு மூவாயிரம் காடி நெல்லும் இரவு 567 காடி நெல்லும் பொன் இருபத்தாறு கழஞ்சும் தண்டமாக இறைவனை போற்றுபவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தான். இந்த வழக்கு மட்டுமின்றி திருவிடைமருதூர் போன்ற சோழ நாட்டுக் கோயில்களில் நடந்த குற்றங்களை விசாரித்து குற்றவாளிகளுக்கு தண்டனை அளித்துள்ளான்.

பார்த்திவேந்திரன்

இம்மன்னனின் கல்வெட்டு பத்துக்கும் மேல் கிடைத்துள்ளன. இவன் யார் என்பதே புலப்படவில்லை. இவனும் வீரபாண்டியன் தலை கொண்ட கோப்பார்த்திவேந்திரன் என்று கூறிக்கொள்கிறான்.

முதலாம் இராசராசன்

திருமால்பூர், தக்கோலம், காவேரிப்பாக்கம் முதலிய ஊர்களில் இம்மன்னனின் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. சில கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்தி மட்டுமே உள்ளது. இந்த நிலை கோயிலைத் திருப்பணி செய்வதன் மூலம் ஏற்பட்ட சிக்கலாகும். காவிரிப்பாக்கத்தில் கிடைத்துள்ள கல்வெட்டு குறிப்பிடத்தக்கது.

விமலாதித்தன்

விமலாதித்த தேவனுடைய கல்வெட்டு மூன்றாம் ஆட்சியாண்டை குறிக்கின்றது. இவன் வேங்கி நாட்டை ஆண்டு கொண்டிருந்த கீழைச் சாளுக்கிய மரபைச் சேர்ந்தவன். இவனது கல்வெட்டு தொண்டை மண்டலத்தில் வருவது வியப்புக்குரியது. முதலாம் இராஜராஜன் வேங்கி நாட்டை படையெடுத்து வென்றான் என்று அவன் மெய்க்கீர்த்தி கூறுகிறது. வெற்றி பெற்றாலும் அதை கீழைச் சாளுக்கிய ஆட்சிக்கே

கொடுத்துவிட்டான். அதன்பிறகு கீழைச்சாளுக்கியரும், இராஜராஜனும் சேர்ந்து மேலைச்சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்து வெற்றியும் பெறுகிறான். அதன்பிறகு தன்னுடைய மகளான குந்தவையை விமலாதித்தனுக்கு மணமுடித்து வைக்கிறான். இவனுடைய நம்பிகைக்குரிய அரசனாக இருப்பதால் தொண்டை மண்டலத்தை ஆளும் உரிமையை கொடுத்திருக்கவேண்டும். அதுவும் சிலகாலமே.

முதலாம் இராசாதிராசன்

இம்மன்னனுடைய கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது. கோயிலுக்கு நிலக்கொடை அளித்த செய்தியைக் கூறுகின்றது.

இரண்டாம் இராசேந்திரன்

இம்மன்னனுடைய கல்வெட்டு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டில் அவனுடைய முழு மெய்க்கீர்த்தியும் பலகைக் கல்லில் வெட்டப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டு மெய்க்கீர்த்தியை மட்டும் வெட்டுவதற்காக என்று கூறப்பெறுகின்றது.

முதலாம் குலோத்துங்கன்

இம்மன்னன் கல்வெட்டு இரண்டு கிடைத்துள்ளன. ஒரு கல்வெட்டு சில இடங்களில் சிதைந்திருந்தாலும் நிலக்கொடையைப் பற்றிய செய்தியைக் கூறுகின்றது. குலோத்துங்கசோழபுரத்து வியாபாரிகள் நிலத்தை வாங்கி ஊரைக்காக்கும் கொல்லத்தரையனுக்காக திருவூறல் மகாதேவர்க்கு கொடையாக அளித்துள்ளனர். இக்கல்வெட்டில் பயின்று வரும் கரையாளன் என்ற பெயர் குறிப்பிடத்தக்கது. இப்பெயர் சோழர் காலத்தில் நிலத்தை ஆண்டு தோறும் பங்கு பிரித்து உழுவதற்கு உரிமை அளிப்பவன்.

மூன்றாம் குலோத்துங்கன்

இவன் காலத்துக் கல்வெட்டுகள் மூன்று கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்று மடப்புறம் அளித்தமைப் பற்றிக் கூறுகின்றது. மற்றொரு கல்வெட்டில் இம்மன்னன் 'திரிபுவன வீரதேவன்' என்றொரு பெயர் கூறப்பெறுகின்றது. மேலும், சில கல்வெட்டுகள் விளக்குக் கொடையையும் பற்றிப் பேசுகின்றன.

இம்மன்னனுடைய கல்வெட்டுகளில் ஒன்று நிலநிர்வாகத்தைப் பற்றியது. சேதிராயன் என்பவன் மணிகண்டேஸ்வரர் கோயிலில் உத்தமசோழீஸ்வரமுடையார் கோயில் என்ற பெயரில் ஒரு கோயிலைக் கட்டினான். இக்கோயிலுக்கு நிலக்கொடை அளிக்க வேண்டும் என்று குலோத்துங்க சோழனிடம் வேண்டுகிறான். அவனின் வேண்டுகோளை ஏற்று மன்னன் நிலக்கொடை வழங்கினான்.

"சேதிராயன் இக்கோயில் எழுந்தருளுவித்த உத்தமசோழீஸ்வர முடையார்க்கு வேண்டும் நிமந்தங்களுக்கு இறுப்பதாக வரியூர் நிலம் தொண்ணூற்றாறு

வேலியும் முப்பத்து நாலாவது முதல் இத்தேவர்க்கு தேவதான இறையிலியாக இடக்கடவதாகப் பெற வேணுமென்று இவன் நமக்குச் சொன்னமையில் இப்படி செய்யக்கடவதாகச் சொல்லி கணக்கிலும் இட்டுக்கொள்ளக் கடவதாகவும் வரிக்குள் கூறுசெய்வார்களுக்கும் சொன்னோம் இந்நிலம் முப்பத்து நாலாவது பசான முதல் இத்தேவர்க்கு தேவதான இறையிலியாகக் கைக்கொண்டு நிமந்தஞ்செய்யப் பண்ணுக என்று எழுதினான் திருமந்திர ஓலை இராசநாராயண மூவேந்த வேளான்".

இந்தக் கல்வெட்டு வாசகம் சோழர்கால நில நிருவாகத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றது. இதைவிடச் சிறப்பாக எடுத்துக் கூறும் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளது.

மூன்றாம் இராசராசன்

இம்மன்னனுடைய கல்வெட்டுகள் இரண்டு கிடைத்துள்ளன. அவற்றில் ஒரு கல்வெட்டு பழங்குடியான் சேதிராயன் என்பவன் இரண்டு நந்தாவிளக்க எரிக்க 64 பசுக்களையும் இரண்டு எருதுகளையும் கொடையாக அளித்துள்ளான்.

சம்புவராயர்கள்

தொண்டை மண்டலத்தில் பத்துக்கும் மேற்பட்ட சம்புவராயர்கள் ஆட்சி செய்துள்ளனர். அவர்களில் வென்று மண் கொண்ட சம்புவராயர், முதலாம் இராசநாராயண சம்புவராயர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் முதலாம் இராசநாராயண சம்புவராயனின் இரண்டு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்று சிறப்புடையது. சம்புவராயர்கள் முன்னூற்றுப்பள்ளி என்று தங்களை கூறிக்கொள்கின்றனர். இந்தப் பெயரை ஊர்ப்பெயராக சிலர் கூறிக்கொள்கின்றனர். ஆனால், இப்பெயர் படைப்பிரிவையும் குறிக்கும். எழுநூற்றுப்படை, ஐஞ்னூற்றுப்படை என்ற பெயர்களை பள்ளி மரபைச் சேர்ந்த படைக்கு முன்னூற்றுப்பள்ளி என்ற பெயர் வந்திருக்கலாம்.

முதலாம் இராசநாராயணனின் தக்கோலக் கல்வெட்டில் இம்மன்னனுடைய மெய்க்கீர்த்தி சமஸ்கிருத மொழியில் அமைந்துள்ளது. தொடக்கத்தில் தான் பல்லவ குலத்தில் தோன்றியவன் என்று கூறிக்கொள்கிறான். மேலும், பல்லவ குலதிலகன் என்று கூறுகிறான். பல்லவர்கள் கோத்ரமாகிய பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்று கூறிக்கொள்கிறான். காஞ்சிபுரவராதீஸ்வ காமகோட்டத்தை பூஜிப்பவன் என்றும் தன்னை பரம மாகேஸ்வரன் என்றும் வராசதுவஜன் (கொடி) யுடையோன் (விஜயநகரர் கொடி) என்றும் கூறிக்கொள்கிறான். திருவேங்கடநாதனிடம் திருவடியைப் பூசிப்பவன் காடவராயர், பாண்டியதாயார் ஆகிய அரசுகளை ஆட்சி பீடத்தில் அமர்த்தியவன். பல அரசர்களின் மணி மகுடம் அவன் பாதங்களில் படிந்தன. வல்லாளராய மானத்தைக் காத்தவன். இங்கு வல்லாளன் என்பது போசளரையும் குறிக்கும். சோழ அரசரை

ஆட்சிப்பீடத்தில் அமர்த்தியவன், காகதியராயர், மாளவராயர் (மழவர்) ஆகியோருக்கு எதிரானவன். மதியாதமன்னர் தலைவன்; பல்லவ திரிணேனன் பல்லவராயர் குமார பசவஸ்வராயர் என்றெல்லாம் தன்னைக் கூறிக்கொள்கிறான். தொடக்கத்தில் தற்கோலத்து உடையார் திருவூறல் உடைய நாயனார் ஆகிய தெய்வங்களுக்கு அமுது படிக்கும் பல பணிகளுக்கும் திருவிழாக்களுக்கும் பசவசங்கரன் சந்திக்கும் ஆக நிலக்கொடை அளித்தச் செய்தி கூறப்பெறுகின்றது. கல்வெட்டின் பின்பகுதியில் நிலக்கொடையின் விவரம் விரிவாகத் தரப்பட்டுள்ளது. இந்த நிலக்கொடையின் மூலம் வந்த வரிகளை பற்றிய விவரங்களும் விரிவாகக் தரப்பட்டுள்ளன. கொடை அளித்தவர் பொதுக்காமூர் சித்தரசர், திருமகனார் புல்லகண்ட சித்தரசர் ஆவர். பொ.ஆ. 14-ஆம் நூற்றாண்டு முதல் மடங்களைப் பற்றிய குறிப்புகள் மிகுதியாகப் பயின்று வருகின்றன. அந்த வகையில் மேலே குறிப்பிட்ட சித்தரசர்கள் மடத்துடன் தொடர்புடையவர்கள் எனலாம்.

இராசநாராயணனின் இரண்டாவது கல்வெட்டு சிதைந்தநிலையில் உள்ளது. நிலக்கொடையின் அதற்கான வரியின் குறிக்கப்பெறுகின்றது.

தெலுங்குச் சோழர்கள்

இந்த மரபினைச் சேர்ந்த மன்னர்களில் இரு மன்னர்களின் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. முதலாமவன் விசையகண்ட கோபாலன் ஆவான். இவனுடைய கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. இரண்டாவது மன்னன் வீரகண்ட கோபாலன். இவனுடைய இரண்டு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. விசையகண்ட கோபாலனின் கல்வெட்டில் திரிபுராந்தக தேவன் என்பவன் திருவூறல் மகாதேவர்க்கு மாசி மாதத்திற்கு பின்னால் (மாசி மகம்) கொண்டாடுவதற்கு நிலக்கொடை அளித்துள்ளார். இக்கொடை மூலம் கிடைக்கும் வருவாயில் இருந்து மாசிமகத் திருவிழாவின்போது அளிக்க வேண்டிய திருப்பள்ளித்தாமம், திருமேற்பூச்சு, நெய்யமுது, கறியமுது போன்ற வெஞ்சனங்களுக்கும் செலவு செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

வீரகண்ட கோபாலன் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. ஒரு கல்வெட்டு மடம் ஒன்றினை நிர்வகிக்க நிலதானம் கொடுத்ததைப் பற்றிக் கூறுகின்றது. இம்மன்னனின் 30-ஆவது ஆட்சியாண்டில் காஞ்சிபுரத்தில் இருந்த அகந்தவஞ்செய்தார் மடத்துக்கு மடப்புறமாக நிலக்கொடை அளித்துள்ளார்கள். மற்றொரு கல்வெட்டு சிவன் கோயிலுக்குத் திருநாமத்துக்காணியாக நிலக்கொடை அளித்துள்ளச் செய்தி கூறப்பெறுகின்றது. காஞ்சிபுரத்தைச் சார்ந்த தேவரடியாரில் தங்கச்சியார் மகள் நாச்சியார் கரிவேட்டு அருக்கணீஸ்வரமுடையார் கோயிலுக்கு நிலக்கொடை அளித்துள்ளார். கரிவேடான குலோத்துங்கச் சோழ நல்லூர் என்று ஊர்ப்பெயர் கூறப்பெறுவதால் அது ஏற்கனவே தேவதானமாக விளங்கியது எனலாம். இந்த ஊரில் வாழும் தேசி திருவுடையான் என்பவன் நிலத்தில் ஒரு பகுதியை திருநாமத்துக்காணியாக அளித்துள்ளான்.

விசயநகர மன்னர்கள்

பொ.ஆ.1369-இல் ஆட்சிக்கு வந்த வீரகம்பண உடையார் தெற்கு நோக்கி படையெடுத்து வந்தான் அவனுடைய மனைவி கங்காதேவி எழுதிய மதுராவிஜயம் என்ற நூலில் இந்த படையெடுப்பைப் பற்றி விரிவாகச் பேசப்பட்டுள்ளது. மதுரை வரையில் படையெடுத்துச் சென்ற போது படைவீட்டை (இன்றைய படவேடு) முற்றுகையிட்டான். இரண்டாவது முற்றுகை செய்த போது படைவீட்டு கோட்டையைப் பிடித்தான். அப்போது சம்புவராய மன்னன் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டான். அந்த நேரத்தில் வீரகம்பணன் சம்புவராயனுக்கு சவால் விட்டான். அந்த சவால் நீயும் நானும் ஒற்றைக்கு ஒற்றை சண்டையிடுவோம் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்கே அரசு உரிமை உண்டு. சம்புவராயன் புற்றிலிருந்து வரும் பாம்பைப் போல் கோட்டையை விட்டு வெளியே வந்தான் (இது மதுராவிஜயத்தில் கூறப்பட்டுள்ளது). இருவருக்குமிடையில் நடைப்பெற்ற வாட்போரில் வீரகம்பணன் சம்புவராயனை வீரசொர்க்கத்திற்கு அனுப்பி வைத்தான். அதன் பிறகு சம்புவராயனின் மகனுக்கு தன் மகளை மணமுடித்து படைவீட்டு நாட்டை அவனிடம் ஒப்படைத்தான்.

வேலூர் மாவட்டத்தில் பெரிய உடையார் காலம் முதல் சிங்கராயர் காலம் வரையில் ஆண்ட சில மன்னர்களின் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றில் சில கல்வெட்டுகள் அரிய செய்திகளை தருகின்றன. விசய நகர மன்னர் கல்வெட்டுகள் இந்தத் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. அரியண உடையாரை தவிர பிற மன்னர்களின் கல்வெட்டுகளில் சக ஆண்டு குறிப்பிடப்பெறுகின்றது.

அரியண உடையார்

இம்மன்னனுடைய கல்வெட்டுகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. ஒரு கல்வெட்டு கரிவேட்டைச் சேர்ந்த குருகுலராயன் கொற்றமான் என்பவன் நிலக்கொடை அளித்துள்ளான். கோயிலில் ஒரு மண்டபத்தையும் கட்டியுள்ளான். நாயனாரையும், நாச்சியாரையும் எழுந்தருளிவித்தான். இவ்விரு செய்திகளையும் கூறும் வாசகங்களில் முன்பின் சொற்கள் சிதைந்துள்ளன. இதனால் இந்த செய்திகளை புரிந்து கொள்வதில் தடையுள்ளது. இக்கல்வெட்டில் கொற்றமான் என்ற சொல் பின்னொட்டாக குறிக்கப்பெறுகின்றது. கொற்றமான் என்று குறிக்கப்பெறும் நபர்கள் அரசு நிர்வாகத்தில் பெரும் பங்கு பெற்றிருக்கவேண்டும்.

வீரபிரதாப தேவராயர்

இவன் காலத்துக் கல்வெட்டுகள் பல அரிய செய்திகளை தருகின்றன. மொத்தம் ஆறு கல்வெட்டுகள் இம்மன்னனின் பெயரைத் தாங்கியுள்ளன. அவற்றில் இரண்டு கல்வெட்டுகள் ஒரே வாசகத்தைக் கொண்டுள்ளன. இவ்விரு கல்வெட்டுகளில் சில பகுதிகள் சிதைவுற்றமையால் கல்வெட்டின் முழுப் பொருளை உணர்ந்துகொள்வதில் சிக்கல்கள் உள்ளன.

மல்லிகார்ஜுனதேவராயன்

இவர் வீரபிரதாபராயருடைய மகனாகக் கூறிப்பெறுகின்றார். இம்மன்னனின் கல்வெட்டுகள் இரண்டு கிடைத்துள்ளது. இவ்விரண்டு கல்வெட்டுகளும் காவிரிப்பாக்கத்தில் கிடைத்துள்ளன. முதல் கல்வெட்டு 60 பங்குகளாக பிரிக்கப்பெற்ற செய்தியைக் கூறுகின்றது. தங்களுக்குள் நிலத்தைப் பங்கிட்டு உரியோர்களுக்கு பங்குகளை தருகின்றனர். அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

1. எங்கள் ஊர் 60 பங்கில் பகிர்ந்து கொண்டு என்றென்றைக்கும் அனுபவித்து வரலாம்.
2. இறை இறுப்புக்கும் இராயச வர்கத்தாருக்கும் கொடுத்த அடை ஒலையை மதித்து பயிர் வழியிலே இருக்கக்கடவோமாகவும்
3. இராசவராயர் ஊர் ஆகையாலே ஒருவன் கட்டிய மனையை ஒருவன் கேட்டால் அதை ராசகரத்தான் வாங்கிக் கொண்டு .... மன்றாடி (வழக்காடி) விடுவித்துக்கொள்ள உரிமை உண்டு. போன்ற விதிகளை விதித்து பங்குகளை பிரித்துக்கொண்டனர்.

இக்கல்வெட்டில் கரைக்காரர் என்றொரு வாசகம் கூறப்பெறுகின்றது. இவர் 60 பங்குகளை கரையோலை (Lot) மூலம் பிரித்துக்கொடுத்திருக்கவேண்டும். இதன் மூலம் காவிரிப்பாக்கத்தில் கரையீடு செய்யும் முறை இருந்துள்ளது என்பது புலப்படுகின்றது. கரையீடு என்பது நிலத்தையோ தொழில் உரிமையையோ பாட்டு ஒப்புவிக்கும் போட்டியில் பாட்டைத் தேர்ந்தெடுக்கும் முறையிலோ கரையீடு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு பங்கு பிரிப்பவனுக்கும் பங்கு பெறுபவனுக்கும் இடையில் எந்த தொடர்பும் இல்லை என்பதைக் காட்டுவதற்கு இந்த கரையீடு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்றொரு கல்வெட்டு வைசிய வாணிகர்கள் தாங்கள் வாழும் நடுத்தெருவில் உள்ள கேசவப்பெருமாள் கோயில் திருப்பணிக்கும் மற்ற செலவினங்களுக்கும் அத்தெருவில் வசூலாகும் பணம் பூசராயன் பத்துக்கு மூன்று பணம் ஆகியவற்றை தர ஒப்புக்கொண்டுள்ளனர் இந்த வரி வருவாயினை வன நகரத்தார் அளித்துள்ளனர். அரசானது, வாணிகரின் செயல்பாட்டில் தலையிடவேயில்லை. நகரத்தார் நாட்டார் பிரமதேய கிழவர் கனிமுற்றூட்டு வேட்டப்பேறு ஆகிய குடிகளில் அரசு தலையீடு இல்லாமல் தானே இயங்க செய்தனர்.

நாயக்க மன்னர்கள்

வீரப்பநாயக்கர், லிங்கம நாயக்கர், பொம்மு நாயக்கர் போன்ற நாயக்க மன்னர்களின் கல்வெட்டுகள் கிடைக்கப்பட்டுள்ளன. இம்மன்னர்கள் கோயில் மண்டபங்களையும், கோபுரங்களையும் கட்டியுள்ள செய்தி கிடைக்கின்றன. இந்த நாயக்க மரபு கிருட்டிணதேவராயர் காலத்தில் எழுச்சிப் பெற்றது. விசய நகர பேரரசு விழ்ச்சியடைந்த போது நாயக்கர்கள் மேலெழுந்து நின்றனர். இக்காலத்தில் மதுரை

நாயக்க மரபு, தஞ்சை நாயக்க மரபு, செஞ்சி நாயக்க மரபு என்று மூன்று வகை நாயக்க மரபினர் ஆண்டனர். வேலூர் பகுதியை ஆண்ட நாயக்க மன்னர்கள் உள்ளூர் தலைவர்களாக நின்று ஆண்டுள்ளனர். ஆனால் வேலூர் நாயக்க மன்னர்கள் பரந்து பட்ட நிலப்பகுதியை ஆளவில்லை.

சில கல்வெட்டு கலைச்சொற்கள்

கல்வெட்டுகள் பலவற்றில் இலக்கிய வழக்குகளையும் சில மக்கள் வழக்குகளையும் பதிவு செய்துள்ளனர். மெய்க்கீர்த்திகளில் இலக்கிய வழக்குகள் பலவற்றை பதிவு செய்துள்ளனர். இத்தொகுப்பில் சிறுபாடிக் காவல் கிழான் வேளார், கொற்றமான் மன்று, பெருமக்கள் சம்பளம் கடமை ஆகிய சொற்களை எடுத்துக்காட்டலாம்.

அம்பலம்

இச்சொல் பட்டினப்பாலையில் பயின்று வரும் பொதியில் என்பதே ஆகும். நச்சினார்கினிய என்ற உரைஆசிரியர் பொதியில் என்பதற்கு அம்பலம் என்று பொருள் கூறியுள்ளார். அவரே மலைபடுகடாத்தில் மன்று என்று வருகின்ற இடத்தில் அம்பலம் என்று பொருள் சொல்லியுள்ளார். இரண்டு சொற்களுக்கு ஒரே பொருளை கூறியிருப்பது முரண்பட்டதாகும். மன்று என்பது பல நூறு அடியுள்ள மலை நிழலால் மறைக்கப்பட்ட பகுதியாகும். பொதியில் என்பது மக்கள் வழிபடுவதற்காக உருவாக்கப்பட்ட சிறு கோயிலாகும். அதனால் பொதியில் என்பதை மட்டுமே அம்பலம் என்கின்ற பொருளுக்கு உரிய சொல்லாக எடுத்துக்கொள்ளலாம்.

கல்வெட்டில் அம்பலம் - நீதிமன்றம்

காவேரிப்பாக்கம் கல்வெட்டு ஒன்று பெண்களை சில நாட்களில் அம்பலத்திற்கு அழைத்துவரக் கூடாது என்று இராஜராஜனிடமிருந்து பிரம்மதேய சபைக்கு ஆணை அனுப்பப்பட்டுள்ளது. அந்த ஆணை பின்வருமாறு

> "மஹாஸபையோம் காம[க்கோட்]டத்[தே]கூடி இருக்கப் பெரும[ா]னடிகள் அரிளிப்பாட்டால் வெண்பைய்க்குடி [நா]ட்டு வேளார் வந்து[.*]நுங்களுக்கு எப்பேர்பட்ட கரணங்களும் ஸம்[க்ரா]ந்தியும் உவாவும் வ்யதிபதமும் கரணங்களும் பெறாததாகவும் மற்றும் எப்பேர்பட்டன காட்டுமிடத்தும் புருஷரையும் ஸ்த்ரீகளைக் கொ[ண்டு] போந்து அம்பலத்துப் பெறாதாராகவும் ஸ்த்ரீகளைய் கொண்டுபொதுவார் பெருமானடிகளுக்குக்கும் ஸபையார்க்கும் பிழைத்தாராகவும் இப்பரிசு வ்யவஸ்தையாக [ஶி]லாலே வெ செய்க வென்று பெருமானடிகளருளச் செய்தார் நீங்களும் இப்பரிசே ஶிலாலேவெசெ[ய்*]க

இங்கு பெண்களை அம்பலத்திற்கு அழைத்துவரக் கூடாது என்று கூறப்பெறுகின்றது. இந்த இடத்தில் அம்பலம் என்பது நீதிமன்றத்தைக் குறிக்கும். இன்றும் ஒரு பழமொழி

உள்ளது. ஏழைச் சொல் அம்பலம் ஏறாது என்பதே அது. இங்கு ஏழை என்பது பெண் என்ற பொருளில் ஆளப்பட்டது. இந்தப் பொருள் பற்றி ஆராய தருமபுரி மாவட்டத்தில் ஆதனூர் என்ற ஊரில் கிடைக்கும் நடைமுறை பயன்படுகிறது. அவ்வூரில் ஏழூர் மண்டு என்ற ஓர் இடம் உள்ளது. இந்த இடத்தில் குறிப்பிட்ட ஆண்டு இடைவெளியில் அப்பகுதியில் நடைபெற்ற குற்றங்களை விசாரிப்பார்கள் அப்போது சாட்சிகளையும் விசாரிப்பார்கள். சாட்சிகளை விசாரிப்பவர்கள் பெண்களை விசாரிக்க வேண்டும் என்றால் மன்றுக்கு அழைத்து வரமாட்டார்கள் அவர்களை குறிப்பிட்ட தூரத்தில் நிறுத்திவிட்டுப் பணியாளர்களை அனுப்பி சாட்சிகளைப் பதிவு செய்வார்கள். இதுவும் பெண்கள் நீதிமன்றத்திற்கு வரக்கூடாது என்ற மரபினைக் காட்டுகிறது.

சிறுபாடி காவல்

பாடிகாவல் என்ற சொல் திருநாவுக்கரசர் தேவாரத்தில் பதிந்துள்ளதைக் காணலாம். திருகோடிக்கா பதிகத்தில் இச்சொல் பயின்று வருகின்றது. கோடி குழகருடைய தாளடியைப் பணிந்து அருளைப் பெறாமல் பாடிகாவலிலே பட்டுழல்வீரே என்று கூறுவார். அதனால் பாடிகாவல் என்பது கீழ்நிலையில் வைத்து எண்ணப்பட்டது எனலாம். சோழர்கால கல்வெட்டுகளில் முதன் முதலாக முதலாம் பராந்தகன் காலத்தில் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றது. அப்போதும் ஊரக மக்களிடமிருந்து (ஊர்ச்சபை, பிரம்மதேய சபை) வாங்கி பாடிகாவலர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை இந்த வரி(காணிக்கை) தேவார காலத்தில் இருந்து இருந்தமைப் பற்றிய குறிப்புகள் நமக்கு கிடைக்கின்றன. அதற்கு முன்பும் இந்தவரி வாங்கப்பட்டிருக்கலாம். பொ.ஆ. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து காலம் செல்லச்செல்ல பாடிகாவல் பற்றிய குறிப்புகள் மிகுதியாகப் பயின்று வருகின்றன காரணம் நிர்வாகம் ஊரக நிலையிலேயே நின்று விட்டதால் ஆகும். நாயக்கர் காலம் வரை பாடிகாவல் தொடர்ந்து இருந்தமைப் பற்றி புதுக்கோட்டையிலிருந்து கிடைக்கும் ஆவணங்கள் சிறந்த சான்றுகள். அந்த ஆவணங்கள் பாடிகாவலாக தானியம், கோழி, ஆடு ஆகியவற்றையும் பெற்றுள்ளார்கள் என்பது புலப்படுகின்றது.

ர. பூங்குன்றன்

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 603/2024*

மாவட்டம்	: வேலூர்	ஆட்சியாண்டு	: 4
வட்டம்	: வாலாஜா	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 988-89
ஊர்	: திருமால்பூர்	இ.க.ஆ.அறிக்கை	: 265/1906
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.க.தொ XXII/265
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 1
அரசு	: சோழர்		
அரசன்	: முதலாம் இராஜராஜன்		
இடம்	: மணிகண்டேஸ்வரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.		

குறிப்புரை : மன்னன் கோயிலுக்கு 497 கழஞ்சு பொன்னும் 2 கழஞ்சு கொண்ட ஒரு பொற்பூவும் கொடையளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

Summary : The south wall of the central shrine in the Maṇikaṇḍīśvara temple. Tamil̠ - Chōl̠a -Rājarāja-I. r.y. 4 (988-89 C.E.). It records a gift made by the king to the God Mahādēva at Tirumālpēṟu. He gifted 497 *kal̠añju* and a gold flower weighing 2 *kal̠añju*, when he paid a visit to the temple to offer worship.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேஸரிவந்மரான ஸ்ரீ மும்முடிசோழதேவர் தமக்கு யாண்டு ச ஆ . . . .
2. ட்டுத் திருமாற்பேற்று மஹா[ர*]தேவரைத் திருவடி தொழுது கொடுத்தருளின பொ . . . .
3. ச் செம்மை குடிஞைக்கல்லால் நானூற்றுத் தெண்ணூற்றேழு கழஞ்சும் பொற்பூ ஓன்று குடிஞை-
4. க்கல்லால் இரு கழஞ்செய் ஏழு மஞ்சாடியுங் குன்றியும் இவை இவ்வாண்டு ன் ஈஉயகூ னா[ள]ால்க் கா-
5. [ரை] பாக்கமுடையானான அருமொழி மூவேந்த வேளான் தேவர்க்கு கொடு வந்து குடுத்து கல்லில் வெட்டுவி-
6. த்தான் இவை பந்மாஹேஶ்வர ரக்ஷை உ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 604/2024*

மாவட்டம்	: வேலூர்	ஆட்சியாண்டு	: 13
வட்டம்	: வாலாஜா	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: திருமால்பூர்	இ.க.ஆ.அறிக்கை	: 266/1906
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.க.தொXXII/266
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 2
அரசு	: -		
அரசன்	: பார்த்திவேந்திவர்மன்		
இடம்	: மணிகண்டேஸ்வரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.		

குறிப்புரை : நந்திவர்மன் காடு பட்டிகன் என்பவன் மகள் விஜ்ஜவை மகாதேவியார் 2 நந்தாவிளக்க எரிக்க பொன் கொடையளித்த செய்தியை குறிப்பிடுகிறது.

Summary : The south wall of the central shrine in the Maṇikaṇḍīśvara temple. Tamiḻ - Chōḻa -Parthivendiravarman. r.y. 13 (988-89 C.E.). Gift of two lamps by Vijjavai - Mahādēviyār, daughter of Nandivarma - [kādu] paṭṭigal].

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்-
2. டியனை தலைகொண்ட
3. கோப்பாற்த்தி வே஌ாதிப-
4. நூற்க்கு யாண்டு யிங ஆவது
5. தாமற்கோட்டத்து தாமற் நா-
6. ட்டு பட்டாலமாகிய எழுநூற்
7. றுவ சதுவேூகிமங்கல-
8. த்து ஸ஭ையோம்
9. யெழுத்து வல்லமனார் மக[ள்]-
10. யர் [வி]ச்சவையார் பக்கல்
11. யாங்கள் கொண்டு கடவ பொன்
12. கட்டளை துளை நிறை இருபத்தை-
13. ங்கழஞ்சு இப்பொன்னுக்கு பொ-
14. லியூட்டாக இக்கோட்டத்து திருமா-

15. ல் பேற்று உஹாதேவற்கு இ-
16. ரண்டு நொந்தாவிளக்கு காடு-
17. பட்டிகள் . . . மனித்த . . . . க்கொ-
18. ன்றும் நஜிபநூகாடு பட்டிகள்
19. மகளார் விஜ்ஜை உஹாதேவி -
20. யார் விளக்கு ஒன்றும் இவ்விரண்-
21. டு விளக்குனு . . . . ஊ-
22. ரிடையர்வ . . . .
23. இடைக்கு ம . . . .
24. ண்ண சஜூா . . . . ம் முட்-
25. ட்டாமே அட்டுவோமானோம் பட்டாலமா-
26. கிய எழுநூற்றுவ சதுவெ௨திமங்க-
27. லத்து ஸஹையோம் இவ்வெ-
28. ண்ணை முட்டில் யநூஸாநத்து நிசதம்
29. அரைக்கால் பொன் மன்றுவதாகவும்
30. . டுவிக்க தா . . . . க்கில் நிசத மஞ்சாடி
31. பொன் தண்டுவதாகவும் எண்ணையெ-
32. . . . . திருவுண்ணாழிகை யிடையர்களுக்கு
33. நிசதம் இரண்டு சோறு குடுப்பதாகவும்
34. இப்பரிசு இட்டு சிலாலேகை செய்து குடு-
35. த்தோம் பட்டாலமாகிய எழுநூற்றுவச்-
36. சதுவெ௨திமங்கலத்து ஸஹையோம்

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 605/2024*

மாவட்டம்	: வேலூர்	ஆட்சியாண்டு	: 3
வட்டம்	: அரக்கோணம்	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 988
ஊர்	: திருமால்பூர்	இ.க.ஆ.அறிக்கை	: 268/1906
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.இ.க. XIII/132
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 3
அரசு	: சோழர்		
அரசன்	: முதலாம் இராசராசன்		
இடம்	: மணிகண்டேசுவரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.		

குறிப்புரை : மதுராந்தகன் கண்டராதித்தன் என்பவன் சிவன் கோயிலில் விடியற்காலை வழிபாட்டிற்கும் ஞாயிறு வழிபாட்டிற்கும் பால் ஊற்றுவதற்காக இருபது காசு கொடையளித்துள்ளான்.

Summary : On the south wall of the sanctum sanctorum Rājarāja - I r.y. 3 (988 C.E.). It records a gift of twenty *kāsu* for conducting *pālabishēka* during early hours of morning by Madurāntakaṉ Kaṇḍarādita<u>n</u>.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. கோவிராசகே-
3. சரிவந்மற்கு
4. இயாண்டு ௩ ஆ-
5. வது ௩௰௬ ன்
6. [ஸ்ரீ] மதிராந்தக-
7. ன் கண்டராதி[த்*]த-
8. ன் திருமால்பேறு உடையா-
9. ர்க்கு சஹூாதி[த்]தவற் சிறுகா-
10. லைச்சந்தியும் நாயறும்
11. ஸ்நி ஆழ்வார்க்குப் பா[ல் ஆ]ட்டியருள-
12. வச்ச காசு இருபது இவை இருப[தா*]லும் சே-
13. ங்கன்று ஒன்றால் உள்ளன [நா]குக்கும் ப-

14. சுவுக்கும் மாறிக்கொள்வதாகவும் இ-
15. ப்பசுப் பெ . . பால் ஆட்டு . . . .
16. வும் இப்படி ஆ . . . வி . . . .
17. மாயெ . . வாரியரும் . . . .
18. ணாழிகை . . . . யோமும் . . . .
19. பநூஹெஸ்஥ரர் இரக்ஷெ[॥*]

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 606/2024*

மாவட்டம்	: வேலூர்	ஆட்சியாண்டு	: -
வட்டம்	: வாலாஜா	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: திருமால்பூர்	இ.க.ஆ.அறிக்கை	: 269/1906
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.க.தொ XXII/269
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 4
அரசு	: சோழர்		
அரசன்	: முதலாம் இராஜராஜன்		
இடம்	: மணிகண்டேஸ்வரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.		

குறிப்புரை : திருமால்பேறுடைய மகாதேவர் கோயிலுக்கு ஒரு நந்தாவிளக்கு வைக்க பன்னிரண்டு கழஞ்சு செம்பூர் கோட்டத்து வடகரை உடையான் கண்ணந்தை குட்டத்தாழி என்பவன் கொடுத்துள்ளான்.

Summary : On the south wall of the sanctum sanctorum Rājarāja - I. It records a gift 12 kaḷanju for a perpetul lamp to Tirumāpēruḍaiya mahādēvar temple by Kannanthai Kuttattāḷ of vadakarai in Sembur kōṭṭam.

கல்வெட்டு :

1-10. கல்வெட்டு சிதைந்துள்ளது
11. க்கோட்டத்து வ-
12. ல்லநாட்டத் தி-
13. ருக்காமக்கோட்டப்பு-
14. றத்து நெல்வாயில் லூரோ-
15. ம் கைய் எழுத்து இக்கோ-
16. ட்டத்து இந்நாட்டுத் திரு-
17. மால்ப் பேறுடைய ஊஹாஷே-
18. வர்க்கு செம்பூர் கோட்டத்து வடக-
19. ரை உடைய்யான் கண்ணந்தை குட்டத்தா-
20. ழி மறுபக்கமாரி இத்தேவர்க்கு வை-
21. த்த நொந்தாவிளக்கு ஒன்றினுக்-
22. குக் குடுத்த பொன் கநகட்டளையால் து-

23. . . . . . . பன்னிருகழஞ்சு இப்பொ-
24. ன் பன்னிரு கழஞ்சுங் கொண்டு கட-
25. வோம் இப்பொன்னுக்குப் பலிசை
26. நிசதம் உழக்கெண்ணை நின்றானோ-
27. டொக்கும் . . . னால் இத்தேவர் கோ-
28. யிலுக்கேய் கொண்டு சென்று அட்டு-
29. வோமானோம் நெல்வாயில் ஊரோம்
30. இவ்வெண்ணைக்கு வைத்த ஈழவிளக்கு
31. சந்திராதித்தவல் அ-
32. ட்டுவோமானோம் இ-
33. தற்றிறம்பில் இயநூா-
34. தனம் முள்ளிட்ட

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 607/2024*

மாவட்டம்	: வேலூர்	ஆட்சியாண்டு	: 27
வட்டம்	: வாலாஜா	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1097
ஊர்	: திருமால்பூர்	இ.க.ஆ.அறிக்கை	: 270/1906
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.க.தொ XXII/270
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 5
அரசு	: சோழர்		
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்		
இடம்	: மணிகண்டேஸ்வரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.		

குறிப்புரை : இக்கல்வெட்டு மடத்திற்கு நிலம் கொடை அளித்ததைப் பற்றிக் கூறுகின்றது. வள்ளைக்கிழான்காளையன்தேவகணாதநானஅதிராஜேந்திர தமிழ விழுப்பரையன் நான்கு காசு கொடுத்து விலைக்கு வாங்கியுள்ளான்.

Summary : On the south wall of the sanctum sanctorum in the same temple. r.y. 27, 1097 C.E. It records a sale of 1000 *kuḻi* of temple land tax-free for 4 *kāśu* to a certain Kāḷaiyaṉ Dēvagaṇattāṉ *alias* Adirājēndra -Tamiḻ - Viḻupparaiyaṉ of Samangaili in Kāyirampēḍu-nāḍu a division of Kāli-yūr-kōṭṭam for endowment to a *maṭha* in the temple. The land is said to have been situated in the *dēvadāna* village Śiṟṟiyāṟṟūr in Puriśai-nāḍu a division of Maṇaiyiṟ-kōṭṭam and had lapsed to the temple as the land holder had been a defaulter in the payment of the *iṟai* (tax) thereon.

கல்வெட்டு :

1. ஸ்ரீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு உ௰எ-வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துத் தாமற்கோட்டத்து வல்-
2. ல நாட்டு உடையார் திருமால்ப்பேறுடையார் கோயிலில் ஶ்ரீஶாஸ வணஙெஸ்வரர் கையெழுத்துக் காலியூர்க் கோட்டத்து
3. காயிரம் பேடுநாட்டுச் சமங்கலியில் வள்ளைகிழாந் காளையந் தேவகணாதநாத அதி(ரி)ராஜேஜ்த் தமிழவிழுப்பரையந் உடையா-
4. ர் திருமால்ப் பேறுடையார் திருவிதி மடப்புறத்துக்கு நிலங்கொண்டிறைழிச்சி விட்ட நிலவிலையு மிறைவிலையுமாகத் தேவர்
5. பண்டாரத்து ஒடுக்கின காசு நாலு இக்காசு நாலுக்கும் இத்தேவர் தேவதாநம் மணையிற் கோட்டத்துப் புரிசை நாட்டுச் சிற்றியாற்றூரில்
6. முன்பு நாம் பெற்று ஒருவந் காணியாய் இறையிறுத்துவாராதே பாழ்கிடந்த காம்பறை நிலத்தில் திருத்திக் கொள்ள இத்திருவீதி மடப்பு-

7. றமாக விற்றுக்குடுத்த நிலமாவது இராசநாராயணவதிக்குக் கிழக்கும் பழங் கம்பந்காலுக்கு வடக்கு ஐந்தாங்கண்ணாற்று மேற்கில் நி-
8. ன்றும் ஐந்தாம் பாடகத்து கிழக்குப் பாடகம் இரண்டரையாற் குழி ஆயிரமும் மடப்புறமாக விற்று இக்காசு நாலுமே நிலவிலையுமிவை-
9. றவிலையுமாகக் கொண்டு இறையிலி ஆக விற்று விலை ஆவணஞ் செய்துகுடுத்தேந் ஆஷிஷாஸ வணஜெஸ்வரர்நேந்
10. திருமால்ப் பேறுடை ஆரை திருவாராதநை பண்ணும் ஶிவஸ்ராஹூணந் கௌஶிகந் ஐஷஸவாஹந ஸட்டநேந் இவை எந்நெ-
11. நழுத்து இப்படிக்குத் திருமால்ப்பேறுடையார் கோயிலில் ஶிவஸ்ராஹூணந் ஸாரஷ்ாஜி உத்தமபட்டநேந் இவை எந்நெ-
12. நழுத்து இப்படிக்கு இக்கோயிலில் ஶிவஸ்ராஹூணந் சூதெ்ரயந் காமக்கோட்டநேந் இவை எந்நெழுத்து இப்படி அறிவேந் சி-
13. ற்றியாற்றூர் ஸ்ராஹூணந் காரம்பிச்செட்டுச் சீராம ஸட்டநேந் இவை எந்நெழுத்து இப்படி அறிவேந் திருமால்ப்பேறு அம்பலக்காத்-
14. தாநேந் இவை எந்நெழுத்து இப்படி அறிவேந் வடுகநாதந் திருச்சிற்றம்பல முடையாநேந் இவை எந்நெழுத்து இப்படி அறிவேன் பொ-
15. ந்நாலந் திருமால்ப் பேறுடையாநேந் இவை எந்நெழுத்து

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 608/2024*

மாவட்டம்	: வேலூர்	ஆட்சியாண்டு	: 46
வட்டம்	: வாலாஜா	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: திருமால்பூர்	இ.க.ஆ.அறிக்கை	: 271/1906
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.க.தொ XXII/271
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 6
அரசு	: சோழர்		
அரசன்	: முதலாம் குலோத்துங்கன்		
இடம்	: மணிகண்டேஸ்வரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.		

குறிப்புரை : மணிகண்டேஸ்வரர் கோயிலில் 10 நந்தாவிளக்கு எரிப்பதற்கு 60 காசுகள் நகரத்தார் கொடையாக பெற்றுள்ளார்கள். இந்தக் கொடையை அளித்தவர் மதுராந்தகன் பொன்னம்பலக்கூத்தனான காலிங்கராயர். இந்த நகரத்தார் பந்தியான உலகமாதேவிபுரத்தை சேர்ந்தவர்கள் பெற்றுக்கொண்ட ஒரு காசுக்கு மாதந்தோறும் 5 உழக்கு எண்ணெய் வட்டியாக அளிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள். மேலும், 60 காசுக்கு 75 நாழி எண்ணெய் அளக்கவும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். இவர்கள் சிவபிராமணரிடம் இந்த எண்ணெய் அளப்பதாக கூறுகிறார்கள். இந்த கொடையை பெற்றதற்கு நகரச் சபை உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டு 19 பேர் கையொப்பமிட்டுள்ளார்கள்.

Summary : The south wall of the central shrine in the Maṇikaṇḍīśvara temple. Tamiḻ - Chōḻa -Kulōttuṅga-I r.y. 46 (1115-16 C.E.). It records an endowment of 60 *kāśu* made by Madhurāntakaṉ Ponnambalakkūttar alias Kāliṅgarājar the headman of Arumbākkam residing at Maṇavil in Maṇavil-nāḍu a sub-division of Maṇaviṟ-kōṭṭam for burning 10 perpetual lamps in the temple at Tirumālpēru in Valla-nāḍu a division of Dāmaṟkōṭṭam in Jayaṅkoṇḍaśōḻa-maṇḍalam. The *Nagarattār* of Pandi alias Lōkamādēvi puram in the same kōṭṭam who received the amount agreed to measure out as interest thereon 75 *nāḻi* of oil every month to Śivabrāmaṇas of the temple. The record is attested at the end by 16 signatories including the Nagarakkaṇakku.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது விளங்கச் சயமாது விரும்ப நிலமகணிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடி
2. சூடி மிநவர் நிலைகெட வில்லவர் குலைதர எனைமந்நவ ரிரியலுற்றழிதரத் திக்கணைத்துந்தந் சக்கர நடாத்தி
3. விஜயாபிஷெகம் பண்ணி வீரஸிம்ஹாஸநத்து உலகுடையாளோடும்

4. விற்றிருளருளிய கோராஜகேஸரிவன்மரான சக்ரவர்த்திகள்
5. ஸ்ரீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு ௪௰௬ ஆவது
6. ஜயங்கொண்ட சோழ மண்டலத்துத் தாமற்கோட்டத்துத் தா-
7. மர் நாட்டுப் பஷியாந உலோகமாதேவிபுரத்து நகரத்தோம்
8. இக்கோட்டத்து வல்ல நாட்டுத் திருமாற்பேற்று உடையார்
9. திருமாற்பேறுடையாற்கு மணவிற்கோட்டத்து மணவில் நாட்டு
10. மணவிலரும்பாக்கிழார் மதுராந்தகந் பொந்நம்பலக் கூத்தராந காலிங்கராஜர்
11. வைத்த திருநஞாவிளக்கு ௰ விளக்கொன்றுக் காறுகாசாக விளக்குப் பத்துக்கு
12. பஷியாந உலோகமாதேவிபுரத்து நகரத்தோங் கைக்கொண்ட காசு ௬௰ காசொந்-
13. றுக்குத் திங்கள் ஐவுழக்கெண்ணை பாட்டக்காலொடொக்கும் நாழியாற் பலிசை
14. பொலிவதாகவும் இக்காசறுபதுக்குந் திங்களெழுபத்தைஞ்ஞாழி எண்ணை அளக்கக்கட-
15. வோமாகவும் இக்கோயிலில் ஶிவப்ராஹ்மணர் பக்கலே அளஞ தரவுகொள்ளக்கடவோமா-
16. க்கி இத்திருநஞா விளக்குப் பத்துஞ் சஷிராதித்தவரை செலுத்தக் கடவோமாநோம்
17. இந்நகரஞவரிலும் ஏறிந நகரத்திலிருந்தும் இவ்வெண்ணை இறுக்கக் கடவோமாநோம் உலோகமாதேவிபுரத்து நகரத்-
18. தோம் இப்படிக்கு நகரக்கணக்கு கோவலந் வெண்ணைக் கூத்தநேந் இவை எந்நெழுத்து இப்படிக்கு கடவுழாந் மொடி
19. திருமாகாளமுடையாநேநிவை எந் எழுத்து இப்படிக்குச் சாத்த-
20. ஷைசந்திராதித்த நம்பதாழியேந் இவை எந் எழுத்து இப்படிக்கு சாத்த குமா
21. ரந் சீருடையாநெதியேந் இவை எந்எழுத்து இப்படிக்கு எட்டி தேவ-
22. கணதநேந் இவை எந்எழுத்து இப்படிக்கு விற்பேடுகிழாந் ஆடவலாந்-
23. செம்பியநேந் இவை எந் எழுத்து இப்படிக்கு குழத்தூழாந் ஆரணி ஆரூர நெழுத்து இப்-
24. படிக்கு ஆமுழாந்சேரி வடுகந் ஒப்பாநமைக்கு மங்கலங்கிழாந் கண்டி எட்டியேன்
25. இவை எந் எழுத்து இப்படிக்கு எச்சந் திருவரங்கநும் குளத்தூழாந் சஷி புற்றிடங்-

26. கொண்டாநும் கொற்றந் திண்டியும் ஒப்பாத நமைக்கு இவை கூத்தந் வெண்ணை
27. க்கூத்த நெழுத்து இப்படிக்கு கண்ணவாணியந் ஆதிச்சன் செல்வந் ஒப்பாநமைக்கு மணி
28. ய நகிலநே நிவை எந் எழுத்து இப்படிக்கு ஒருப்பநையந் வள்ளிசநே நிவை எந் எழுத்து
29. இப்படிக்குப் பஞ்ஞைதேவந் காடாடி ஒப்பாநமைக்கு பெருங்காடந் திருவரங்கநேந் இ-
30. வை எந் எழுத்து இப்படிக்கு கூளக்குடையாந் சூறை அகத்தியநே நிவை எந் எழு-
31. த்து இப்படிக்குப் பைய்யன் திருமாகாளம் பெருங்காடநே நிவை எந் எழுத்து
32. இப்படிக்கு கணவதி தாழியேந் இவை எந்நெழுத்து இப்படிக்கு தாழைப்புறம்பி-
33. யந் அருளாநேந் இவை எந்எழுத்து இப்படிக்கு குமாரஞ்ஞை சஷி பெரியாநே-
34. ந் இவை எந் எழுத்து இது பந்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை ***தொடர்எண் : 609/2024***

மாவட்டம்	: வேலூர்	ஆட்சியாண்டு	: 7
வட்டம்	: வாலாஜா	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1124-25
ஊர்	: திருமால்பூர்	இ.க.ஆ.அறிக்கை	: 272/1906
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.க.தொ XXII/272
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 7
அரசு	: சோழர்		
அரசன்	: விக்கிரமசோழன்		
இடம்	: மணிகண்டேஸ்வரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.		

குறிப்புரை : இந்தக் கல்வெட்டு 6000 குழி நிலத்தைக் கோயிலுக்கு விற்றுள்ளார்கள். இந்த கோயில் நிலம் மணவிற் கோட்டத்தில் சிற்றியாற்றூர் என்ற ஊரில் உள்ளது. இந்த நிலத்துக்கு விலையாக 20 காசுகளைப் பெற்றுள்ளனர். உத்தமச் சோழன் பொன்னம்பலக் கூத்தனான கண்ணகதரையர் (கீழ்மாண்டூர், புறக்கிளியூர் நாடு பாண்டி குலாசனி வளநாடு என்ற பகுதியில் உள்ளது.) இந்த நிலக்கொடையில் ஆதி நிலம் உத்தமச்சோழீஸ்வரமுடையார் கோயிலுக்கும் அவிமுத்தீஸ்வரம் உடையார் கோயிலுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்த நிலத்தில் பாக்கு தோட்டத்தையும் நந்தவனத்தையும் நஞ்சை பயிரையும் செய்து கொள்ளலாம். இந்த நிலம் தழுவக்குழஞ்சார் என்பவன் குத்தகைக்கு எடுத்துள்ளான். மேலும் கனகதரையர் 138 கழஞ்சு பொன்னையும் அளித்துள்ளார். இந்த பொன் இறைவனுக்கு ஆபரணங்கள் செய்து வைப்பதற்கு அளிக்கப்பட்டது. வெள்ளி உலோகம் பாத்திரங்கள் செய்வதற்கு அளிக்கப்பட்டது.

Summary : The south wall of the central shrine in the Maṇikaṇḍīśvara temple. Tami̱l - Chō̱la -Vikramachō̱la r.y. 7. (1124-25 C.E.). It records a sale of 6000 *ku̱li* out of their common land to the temple of Tirumārpē̱ruḍaiyār, by the *Ūrār* of Si̱ṟriyā̱ṟṟūr a *ḍēvadā̱na* village in Maṇavi̱rkōṭṭam, for 20 kāśu received by them inclusive of tax-amount (on behalf of the temple) fron Uttamaśō̱la̱n Ponnambalakkūtta̱n alias Kaṇṇagadaraiyar of Kī̱lmāndūr in Purakkiḷyūr-nāḍu, a division of Pāṇḍkulāśani-Vaḷanāḍu in Sō̱lamaṇḍalam. Half of this land is said to be in favour of the gods Uttama-Chō̱līśvaramuḍaiyār and Avimuttīśvaramuḍaiyār in the temple. The land was to be utilised partly as arcanut garden and flower garden and partly as wet land for cultivation to meet the requirements of worship in the temple. It was let on lease by the temple to one Ta̱luvakkuḷaiñja-Pichchar of the Thiruvēgambamūḍaiyār temple at Kāñchīpuram. The donor Kaṇṇagadaraiyar is stated to have made a further gift of about 138 *ka̱lañju* of gold for ornaments to the god in the main shrine and silver etc. for some articles of worship.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமாது புணரப் புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்ப நிருபதமலர் மன்னவர் சூட . . . . . .
2. யில் மணிமுடி சூடிச் செங்கோல் சென்று திசைதோறும் வளர்ப்ப வெங்கலி நிங்கி மெய்யறந் தழைப்ப கலிங்கமிரிய . . . . .
3. லங்கொளாழி வரையாழி திரிய இருசுடரளவு மொருகுடை நிழற்ற வீரஸிங்ஙாஸனத்து முக்கோக்கிழாநடிகளோடும் விற் . . . .
4. கேசரிவந்மராந திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு ஏழாவது ஆனிமாஸத்து பிற்பக . . . .
5. ற்ற சதையத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து திருமாற்பேறுடையார் தேவதானம் மணவிற் கோட்டத்துப் புர . . . .
6. ட்டு குடிநீங்காத் தேவதானஞ் சிற்றியாற்றூர் ஊர்க்குச் சமைந்து சிற்றியாற்று குடையான் அரையன் எறிஞ்-
7. சொடியும் வேளான் சூரியதேவனும் அரயன் பேராயிரமுடையானும் உள்ளிட்டோம் நிலவிலையாவண-
8. க்கையெழுத்து ஆளுடையார் திருமாற்பேறுடையார்க்கும் இக்கோயில் உத்தம சோளிஸ்வரமு-
9. டையார்க்கும் அவிமுத்திஸ்வரமுடையாற்க்கும் திருப்படி மாற்றுள்ளிட்ட னத்துக்கு உட-
10. லாக கமுகு திருநஜவனஞ் செய்கைக்கும் திருபள்ளித்தாம நஜவனஞ்செய-
11. கைக்கும் விளைநிலத்துக்கும் சஜிராதித்தவரை விலைபொருளுக்கு மிறைப் பொருளுக்கும்
12. இக்கோயிலில் ஆதிசண்டேஸ்வர ஸ்ரீபாதத்து சோழ மண்டலத்து பாண்டிகுலா சனி வளநாட்டு பு-
13. றக்கிளியூர் நாட்டுக் கீழ்மாஙுருடையாந் உத்தமசோழன் பொன்னம்பலக்கூத்த நான கண்-
14. ணகதரயர் ஒடுக்கின அன்றாடு நற்காசு இருபது இக்காசு இருபதும் எம்மிலிசைஞ விலைப்பொருளு மிறைப்பொருளு மா-
15. க இவ்வாதிசண்டேஸ்வரர் பக்கல் ஆவணக்களியே கைச்செலவறக் கொண்டு இவ்வாதிசண்டேஸ்வரர்-
16. க்கு நாங்கள் விற்றுக்குடுத்த ஊர்பொதுநிலத்துக்கு தெந்பாற்கெல்லை பல்லி வெட்டார்காலுக்கு வ-

17. டக்கும் மேல்பாற்கெல்லை மாடக்கோயில் ஏத்தத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை கடலாடிக்-
18. கும் சிற்றியாற்றூர் இருபதினாயிரவ னில நிலத்துக்குத் தெற்கும் கீழ்பாற்கெல்லை சிற்றியாற்றூர் நிலத்துக்கு
19. ம் இந்நிலத்தில கலிங்கத்தரயன் குளத்துக்கு மேற்க்கும் இநாற்பாற்கெல்லைக் (க்)கு நடுவுபட்ட விளைநிலமும் கொ-
20. ல்லை நிலமும் பதிநாற்சாண்கோலால் மிகுதிக்குறைவுள்ளடங்கக் குழி ஆறாயிரம் இக்குழி ஆறாயிரத்தில் நிலங்க-
21. லவாற்றால் உடையார் திருமாற்பேறுடையார்க்குச் செம்பாதியும் இக்கோயில் உத்தமசோளீஸ்வரமுடையா-
22. ர்க்கும் அவிமுத்திஸ்வரமுடையார்க்குச் செம்பாதியுமாக இவ்வாதி சண்டேஸ்வரர்க்கு விற்றுக்குடுத்தோம்
23. இந்நிலத்துக்க ஏரிநீரும் ஆற்றுக்காலும் நீர்க்கீழபடி நீர்பாச்சிக்கொள்ளப் பெறுவதாகவும் இநிலத்தில் மே-
24. நோக்கிய மரமுங் கீணோக்கிய கிணறு மகப்பட இக்குழி ஆறாயிரமும் இப்படி இறையிலியாக இவ்வாதி சண்டேஸ்வரதேவர்க்கு விற்று
25. விலையாவணஞ் செய்து குடுத்தோம் சிற்றியாற்றூரோம் இவர்கள் வேண்ட எழுதிநேந் கோயிற்கணக்கு வேளான் மலைகினியநின்றான்
26. எழுத்து இப்படிக்கு இவை சிற்றூருடையான் அரயன் எறிஞ்சொடி எழுத்து இப்படிக்கு சிற்றியாற்றூருடையாந் வேளான் சூரியதே-
27. வந் எழுத்து இப்படிக்கு இவை சிற்றி ஆற்றுடையாந் அரயன் பேராயிரமுடையாந் எழுத்து இப்படிக்கு இவை சிற்றியாற்றுடையாந்
28. வேளாந் ஒலோகநாதந் எழுத்து இப்படிக்கு அறிவேந் பட்டாலமுடையா ந்ஷிருநாகீஸ்வரந் சிறுவரைநக்கந் எழுத்து இப்படி அறிவேந் காமுழான் க-
29. ண்ணந் அழியாத்திறல் எழுத்து இப்படி அறிவேந் வெண்பாக்கிழாந் திருமுலி அம்பலக் கூத்தந் எழுத்து இஷ ஆதிசண்டேஸ்வரஷேவர் பக்-
30. கல் பெற்று உடையார் திருவேகம்பமுடையார் கோயிலில் தழுவக்குழைஷ பிச்சர் இவர் வற்கத்தாருமே சஷிராதித்தவரை இஷ கமுகு திருநஷவனஞ் செய்வார்களாகவு-
31. ம் இ திருநந்தவனத்தில் விளைநிலம் இஷ திருநஷவான குடிகளுக் கொற்று ஆவதாகவும் ஆளுடையார் திருமாற்பேறுடையார்க்கு இஷ கீழ்மாந்ஷுருடை

32. யான் அரயன் பொன்னம்பலக் கூத்தநான கண்ணகதரயன் பல திருவாபரணத்துக்கு பலமாற்றால் இட்ட பொன் நூற்று முப்பத்தேழு கழஞ்சே மு-

33. க்காலே ஒருமா பரிகலமுங் காளமும் வெள்ளி நாநூற்றறுபதிந் கழஞ்சு அட்டணை ஒன்றுங் காக்காலிரண்டாலும் இஜ தளை நூற்றெண்பத்து முப்பல-

34. முங்க கமுழியும் முகவையால் செப்பு முப்பத்திருபலவரை பலவருவால் வெண்கலம் நூற்றிருபத்திருபலம் நாற்சாணரை நிளத்து தராவிள-

35. க்கு மூன்றுங் கறிக்கால் சங்குக்கலை தரா முப்பத்தைம்பலம் இது [மா]ஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர்எண் : 610/2024**

மாவட்டம்	: வேலூர்	ஆட்சியாண்டு	: 6
வட்டம்	: வாலாஜா	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1068
ஊர்	: திருமால்பூர்	இ.க.ஆ.அறிக்கை	: 273/1906
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.க.தொ XXII/273
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 8
அரசு	: சோழர்		
அரசன்	: வீரராஜேந்திரன்		
இடம்	: மணிகண்டேஸ்வரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.		

குறிப்புரை : ஒரு நந்தாவிளக்கு எரிப்பதற்கு 32 பசுக்களையும் ஓர் எருதையும் கொடையாக அளித்துள்ளனர். திருவரங்கமுடையான் தன்மபரிபாலனாகிய இராஜாதிராஜ மலையராயன் இக்கொடையை அளித்துள்ளான். இவன் மலைதாங்கி குலோத்துங்கசோழ மலையராயன் (முனையதரையன்) என்பவனுடைய மகனாவான் இவனுடைய ஊர் திருநெடும்பிறை என்பதாகும். இவ்வூர் நடுவில் மலை பெரும்பூர் நாட்டிலும், ஜெயங்கொண்ட சோழமண்டலத்திலும் அமைந்துள்ளது.

Summary : The south wall of the central shrine in the Maṇikaṇḍīśvara temple. Tamiḻ - Chōḻa -Vīrarājēndran r.y. 6 (1068 C.E.). This records a gift of 32 cows and a bull for the daily supply of an *uḻakku* of ghee for burning a perpetual lamp in the temple of Tirumāṟpēṟuḍaiyār, made by Tiruvaraṅgamuḍaiyāṉ Daṉmaparipālaṉ alias Rājadhirāja- Malaiyarāyaṉ son of Malaitāṅgi Kulōttuṅgaśōḻa-Malaiyarāyaṉ Muṇaiyadaraiyaṉ of Tiruneḍumpiṟai in Naḍuvilmalai Perumūr-nāḍu a division of Jayaṅkoṇḍaśōḻa-maṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்கேழ்வி முன்னாக த்ரிபுவநச்சக்ரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்த்ர சோழதேவற்கு யாண்டு ஆறாவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து நடுவிந்மலைப் பெருமூர் நாட்டுத் திருநெடும்பிறையில் மலைதாங்கி குலோத்துங்கசோழ மலையராயந் முனையதரையந் மகந் திருவரங்கமுடையானான தந்மபரிபாலனாக இராஜாதிராஜ மலையராயந் இம்மண்டலத்துத் தாமற்கோட்டத்து வல்ல நாட்டு ஆளுடையார்
2. திருமாற் பேறுடையாற்கு வைத்த திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு நாள் க-க்கு இராஜகேசரியால் நெய் உழக்காக முந்நூற்றறுபத்தைஞ்சுக்கு நெய் தொண்ணூற்றொரு நாழி உழக்குக்கு விட்ட பசு முப்பத்திரண்டும் இஷபம் க-ம் ஆக உரு முப்பத்துமூன்று மவியாத இத்தந்மம் சந்திராதித்தவரை செல்வதாக வைத்தது இதுக்கு ரக்ஷை பந்மாஹேஶ்வரர் உ

த.நா.அ. தொல்லியல்துறை *தொடர்எண் : 611/2024*

மாவட்டம்	: வேலூர்	ஆட்சியாண்டு	: 38
வட்டம்	: வாலாஜா	வரலாற்று ஆண்டு	: பொ.ஆ. 1107-08
ஊர்	: திருமால்பூர்	இ.க.ஆ.அறிக்கை	: 274/1906
மொழி	: தமிழ்	முன்பதிப்பு	: தெ.க.தொ XXII/274
எழுத்து	: தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	: 9
அரசு	: சோழர்		
அரசன்	: முதலாம் குலோத்துங்கசோழன்		
இடம்	: மணிகண்டேஸ்வரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.		

குறிப்புரை : திருமால்பேற்று இறைவனுக்கு ஒரு நந்தாவிளக்கு எரிக்க 30 பசுக்களை கொடையாக அளித்துள்ளார். அளித்தவன் அரையன் வீரசோழனான வீரமார்த்தாண்ட விழுப்பரையன் என்பவன் திருவழுந்தூர் நாட்டு எழுமுள்ளூரைச் சேர்ந்தவன். இங்கு குறிப்பிடப்பட்ட நாடு சோழமண்டலத்தில் இராஜநாராயண வளநாட்டில் இருந்தது..

Summary : The south wall of the central shrine in the Maṇikaṇḍīśvara temple. Tamil̲ - Chōl̲a -Kulōttuṅga-I r.y. 38 (1107-08 C.E.). It records a gift of 30 cows for burning a perpetual lamp in the temple at Tirumālpēṟu in Valla-nāḍu a division of Dāmaṟ-koṭṭam in Jayaṅkoṇḍaśōl̲a-maṇḍalam by Araiyan̲ Vīraśōl̲an̲ alias Vīramārttāṇḍa-Vil̲upparaiyan̲ of El̲muḷḷūr in Tiruval̲undūr-nāḍu, a division of Rājanārāyaṇa-vaḷanāḍu in Sōl̲a-maṇḍalam.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரமே துணை ஆகவும் தியாகமே அணி ஆகவும் செங்கோலோச்சிக் கருங்கலி கடிந்து
2. புகழ்காது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறந்து
3. மணிமுடிசூடி வில்லவர் குலைதர மீநவர் நிலைகெட ஏனை மந்நவ ரிரியலுற்றிழிதரத் திக்கனைத்து தன் சக்க-
4. ர நடாத்தி விஜயா பிஷேகஞ் பண்ணி வீரஸிம்ஹாஸநத்து அவநிமுழுவதும் உடையாளோடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகெ-
5. ஸரிவந்மரான சக்ரவத்திகள் ஸ்ரீகுலொத்துங்கசொழதேவற்கு யாண்டு ௩௰௮ ஆவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து
6. தாமற்கோட்டத்து வல்லநாட்டுத் திருமால்ப்பெற்று உடையார் திருமால்ப் பேறுடையாற்க்குச் சோழமண்டல-

7. த்து ராஜநாராயண வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டு எழு முள்ளூருடையாந் அரையந் வீரசோழனான வீரமாத்தாண்ட விழுப்-
8. பரையந் திருமால்ப்பேறுடையார்க்கு வசூராசிகூவற் செல்லக்கடவதாக வைத்த திருநந்தவிளக்கு ஒன்றுக்கு விட்ட சாவா மூவாப்பசு
9. ௩௰ இப்பசு முப்பதும் இக்கோயிலில் திருநஞாவிளக்கிடையந் மாதேவடிகள் திருமால்ப்பேறுடையாநும் இவ-
10. ந் தம்பி மாசிலாமணியும் கைக்கொண்டு மாறிலாமணி நாழியால் நித்தமுழக்கு நெய் விட்டு இத்திருநஞாவிளக்கொந்று-
11. ம் வசூராசிகூவற் செலுத்தக்கடவர்களாநமைக்கு இக்கோயிலில் ஶிவஸ்ராஹ்மணந் வூஷஹவாஹந ஹட்டநும் ஸ்ரீகாரியம்
12. விளத்தூர் கிழவநும் ஸ்ரீமாஹேஶ்வரக் கண்காணி சோதி வைத்த மாநெதியும் இக்கோயிலில் பாரஶிவந் அங்காடி கொளரியும்
13. இக்கோயிலில் தச்சந் தாமோயரந் திருமால்ப் பேறுடையாநும் இப்படி அறிவோம் இவ்வனைவோம் இது ப-
